## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. சாந்தி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2025.

All Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது மாரமங்கலத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன காளிமுத்து என் கணவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். அ.சா.1 என் மகன். 12.11.2019 அன்று எங்கள் ஊரில் ஒரு திருமணம் நடந்தது. திருமண விழாவில் பேனர் வைப்பது சம்பந்தமாக என் கொழுந்தனார் மகன் வினித் என்பவருக்கும், 1ம் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது. அதன் காரணமாக வினித் மற்றும் அவரது மனைவி மீனா ஆகியோர் மாலை 4.30 மணியளவில் எங்கள் ஊரில் தெற்கு நோக்கி சென்றார்கள். அப்போது 1ம் எதிரி செருப்பை அடிப்பதுபோல வினித்திடம் காட்டியுள்ளார். அதுகுறித்து மேற்படி வினித் அ.சா.1 இடம் சொல்லியுள்ளார். அதனால் அ.சா.1ம், வினித்தும், 1ம் எதிரி வீட்டிற்கு சென்று அவரது பெற்றோரிடம் மேற்படி சங்கதி குறித்து சொன்னார்கள். அதுகுறித்து 1ம் எதிரி அ.சா.1 மற்றும் வினித்திடம் எப்படி என் பெற்றோரிடம் சொல்லலாம் என்று சண்டை போட்டுள்ளார். அந்த பகுதி இறப்பு நடந்த பகுதி என்பதால் அங்கு இருந்த பெரியவர்கள் சத்தம் போட்டுள்ளார்கள். அதனால் வினித்தும், அ.சா.1ம் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். மறுநாள் இரவு 8.30 மணியளவில் விவசாய சங்கம் அருகில் குடியிருக்கும் என் மகள் தங்கவள்ளி வீட்டிற்கு நானும், என் கணவரும், அ.சா.1-ம் போனோம். என் மகள் வீட்டின் முன்பாக

தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி கத்தியுடனும், மற்ற எதிரிகள் கம்புடனும் வந்து அசா.1–ஐ குத்த வந்தார்கள். அ.சா.1 இடது கையால் தடுத்ததால் இடது உள்ளங்கையில் வெட்டுபட்டது. வலது கையால் தடுக்கும்போது வலதுபுறங்கையில் வெட்டுப்பட்டது. எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1–ஐ அடித்தவுடன் அ.சா.1 கீழே விழுந்துவிட்டார். அப்போது என் கணவர் என் மகனை அடித்துவிட்டார்களே என்று சொல்லி தடுத்தபோது 1ம் எதிரி கத்தியால் என் கணவரின் மார்பில் குத்திவிட்டார். அப்போது நான் பதறியபோது மற்ற எதிரிகள் என்னை கம்பால் தலை, கழுத்து பகுதிகளில் தாக்கி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதால் எனக்கு தலையில் தையல் போட்டார்கள். அப்போது 1ம் எதிரி என் மகளை வயிற்றில் உதைத்தார். அப்போது 2ம் எதிரி கம்பால் என் மகள் வயிற்றில் குத்தினார். எதிரிகள் அனைவரும் சேர்ந்து எங்களை தாக்கினார்கள். பிறகு என் மாமியார், மருமகன்,மைத்துனர் ஆகியோர் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு எங்களை அழைத்து வந்தார்கள். என் கணவர் குத்துக்காயத்தினால் மூன்று நாட்கள் கழித்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். நான் சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அதனால் என் கணவரின் இறுதி சடங்கிற்கு நான் போகவில்லை. அ.சா.1 மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மருத்துவமனைக்கு நாங்கள் வரும்போது இரவு சுமார் 9 மணியிருக்கும். அ.சா.1–ம், என் மகள் தங்கவள்ளியும் இரவு சுமார் 10.15 மணியளவில் தனியாக மருத்துவமனைக்கு வந்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் கணவருக்கும், எனக்கும் அடிபட்ட நேரத்திற்கும், மற்ற இருவரும் அடிபட்ட நேரத்திற்கும் இடையில் சுமார் 30 நிமிடங்கள்

இடைவெளி இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் என்னால் சொல்லமுடியவில்லை. எனக்கு முன்னந்தலையில் ஒரே ஒரு சிறிய காயத்தை மருத்துவர் பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவத்தில் அரிவாள் பயன்படுத்தப்படவில்லை. கத்திதான் பயன்படுத்தப்பட்டது. நான் 14.11.2019 அன்று மருத்துவமனையிலிருந்து தலைமறைவானதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு இரண்டு நாட்களுக்கு பிறகு 16.11.2019–ல் மருத்துவமனையிலிருந்து தலைமறைவானார் என்றால் இல்லை. என் கணவர் இறந்த பிறகு அவர் விடுவிக்கப்பட்டார். என் மகளுக்கு காயம் இல்லை என்றால் சரிதான். அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் மாத்திரை மட்டும் வாங்கி சாப்பிட்டார். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும், சொன்ன இடத்திலும் அ.சா.1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் 10 நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்து விசாரித்தார். எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பதை மருத்துவரிடம் சொன்னேன். நான் 10 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். 10 நாட்களில் உறவினர்கள் என்னை வந்து பார்த்தார்கள். அவர்களிடம் நடந்ததை சொன்னேன். நான் பேச முடியாமல் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மூன்று நாட்கள் பேசமுடியாமல் இருந்தேன். 10 நாட்கள் கழித்து ஆய்வாளர் வந்து விசாரிக்கும் வரையில் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. திருமண விழாவில் பேனர் வைப்பது சம்பந்தமாக எந்த தகராறும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தகராறு நடக்கும்போது அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் வந்து பார்த்தார்கள். அவர்களுக்கும், எங்களுக்கும் பகை இல்லை. என் மகள் குடியிருக்கும் வீட்டிற்கு அடுத்தாற்போல் விவசாயம் சங்கம் உள்ளது. அங்கு காலி இடம் உள்ளதா என்றால் வீதியாக உள்ளது. அந்த பகுதியில் எப்போதும் தெருவிளக்கு எறிந்ததில்லை என்றால் சரியல்ல.

அந்த பகுதி எப்போதும் சமூக விரோதிகள் உட்கார்ந்து மது அருந்தக்கூடிய இடம் என்றால் சரியல்ல. அதனால்தான் இரவு நேரங்களில் என் மகள் வீட்டிற்கு நான் பாதுகாப்பிற்காக செல்வேன் என்றால் சரியல்ல. பிள்ளைகளுக்காக சில சமயங்களில் நான் என் மகள் வீட்டிற்கு சாப்பாடு எடுத்து செல்வேன். எங்கள் வீட்டிற்கும், என் மகள் வீட்டிற்கும் இடையில் சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும். மது அருந்துகின்ற சமூக விரோதிகளுக்கும், எங்களுக்கும் அரை மணி நேர இடைவெளியில் இரண்டு சம்பவமாக நடந்தது என்றால் சரியல்ல. அதனால்தான் மாறுபட்ட நேரங்களில் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. மாரமங்கலம் முத்துராமன் என்பவர் என் அண்ணன். அவரது மகள் கவிதாவை தெரியும். அவர் காதல் திருமணம் செய்து கொண்டார். அது சம்பந்தமாக ஒரு ராஜ் என்பவர் குடும்பத்திற்கும், கவிதா குடும்பத்திற்கும் பகை இருந்து வந்தது என்றால் சரியல்ல. கவிதா தற்கொலை முயற்சி செய்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. கவிதாவின் காதல் திருமணத்திற்கு நாங்கள் தடை சொல்லவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், அ.சா.1 இடம் வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டு பின்யோசனையின்பேரில் தயாரிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

தீப்பாச்சி மாரமங்கலமும், மாரமங்கலம் வேறு வேறு ஊர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊர் இருக்கும் பகுதி தீப்பாச்சி மாரமங்கலம் என்றால் சரிதான். என் மகள் இருக்கும் பகுதி மாரமங்கலம். எங்கள் வீட்டில் வைத்து எனக்கு இரவு 8.35 மணியளவில் காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட இடத்திலிருந்து மருத்துவமனைக்கு நான் 108 ஆம்புலன்சில் போனேன். என் கணவரும்

என்னுடன் வந்தார். அந்த ஆம்புலன்சில் அ.சா.1–ம் என் மகளும் வரவில்லை என்றால் சரியல்ல. இருட்டான பகுதியில் இருசக்கர வாகனத்தில் என் கணவருடன் நான் சென்றபோது கீழே விழுந்து ஏற்படுத்திக் கொண்ட காயத்திற்காக மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.05 18:20:10 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. தங்கவள்ளி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2025.

All Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மாரமங்கலத்தில் குடியிருந்து காலை உணவு திட்ட பணியில் பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன காளிமுத்து என் தகப்பனார். அ.சா.1 என் அண்ணன். அ.சா.2 என் தாயார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 12.11.2019 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் என் சித்தப்பா மகன் வினித் தன் மனைவியை ஏரலுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது 1ம் எதிரி வினித்தை பார்த்து செருப்பை காட்டியுள்ளார். அப்போது தன் மனைவியை அழைத்துக் கொண்டு ஏரலுக்கு சென்றுவிட்டார். அதுகுறித்து மேற்படி வினித் அ.சா.1 இடம் சொன்னார். அதனால் அ.சா.1–ம், வினித்தும் 1ம் எதிரி வீட்டிற்கு சென்றார்கள். 1ம் எதிரியின் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் ஒரு இறப்பு ஏற்பட்டிருந்தது. அப்போது 1ம் எதிரி வீட்டில் அ.சா.1 அங்கிருந்த 1ம் எதிரியை பார்த்து ஏன் வினித்தை பார்த்து செருப்பை காட்டினாய் என்று கேட்டபோது சண்டை வந்தது. இறப்பு வீட்டிற்காக வந்தவர்கள் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். அப்போது அ.சா.1–ஐ பார்த்து 1ம் எதிரி உன்னை உயிருடன் விடமாட்டேன் என்று மிரட்டியதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். மறுநாள் 13.11.2019 அன்று மாலை விவசாயம் சங்கம் அருகில் உள்ள எங்கள் வீட்டிற்கு அ.சா.1, அ.சா.2, என் தகப்பனார் வந்தார்கள். அவர்கள் வழக்கமாக மாலை 6 மணிக்கு

வந்து இரவு 10 வரை இருப்பார்கள். நாங்கள் வெளியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். அப்போது வழக்கம்போல நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி கத்தியுடனும், மற்ற எதிரிகள் கம்புடனும் வந்து அ.சா.1–ன் இடது உள்ளங்கையிலும், வலதுபுறங்கையிலும் கத்தியை வைத்து 1ம் எதிரி கிழித்துவிட்டார். 2ம் எதிரி கம்பால் அ.சா.1–ன் தலையில் தாக்கிவிட்டார். என் மகனை அடிக்காதே என்று என் தகப்பனார் வந்தபோது 1ம் எதிரி கத்தியால் என் தகப்பனாரின் மார்பில் குத்திவிட்டார். அ.சா.2 தடுக்கப்போனபோது 2 முதல் 4 எதிரிகள் கம்பால் தாக்கிவிட்டார்கள். அ.சா.2க்கு தலையிலும், கழுத்திலும் அடிபட்டுவிட்டது. அ.சா.2 அடிபட்டு விழுந்துவிட்டார். அடிக்காதே என்று நான் சொன்னபோது 1ம் எதிரி என் வயிற்றில் மிதித்துவிட்டார். 2ம் எதிரி கம்பால் என் வயிற்றில் குத்திவிட்டார். ஊர்க்காரர்கள் அங்கு வந்துவிட்டார்கள். அப்போது எதிரிகள் இப்போது தப்பித்துவிட்டீர்கள் என்றும், இன்னொரு நாளைக்கு மாட்டுவீர்கள் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். பிறகு ஊர்க்காரர்கள் வந்தபிறகு 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி நாங்கள் அனைவரும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எனக்கு வலி தாங்கமுடியாமல் ஊசி போட்டுக் கொண்டேன். என் தகப்பனார் மோசமான நிலையில் இருந்ததால் அவருடன் நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அ.சா.1, 2 தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். இரண்டு நாட்கள் கழித்து 16.11.2019 அன்று அதிகாலையில் என் தகப்பனார் மருத்துவமனையில் இறந்துவிட்டார். 13.11.2019 அன்று தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அ.சா.1 புகார் கொடுத்தார். என் தகப்பனாருக்கு நெஞ்சில் குத்துக்காயம் ஏற்பட்டது. என் தகப்பனாரின் ரத்தம் என் உடையிலும் பட்டது. என் உடைகளை போலீசார் வாங்கி கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று இரவே நான் என் தகப்பனாருடன் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு போய்விட்டேன். மருத்துவர் நான் தலைமறைவாகி விட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு வெளிப்படையான காயங்கள் இல்லை. 1ம் எதிரி காலால் என்னை உதைத்ததாகவும், 2ம் எதிரி என்னை கம்பால் குத்தியதாகவும் சொன்னதுபோல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் என்னை விசாரித்தபோது வலிக்கிறது என்று மட்டும்தான் சொன்னேன் என்றால் சரிதான். காயம்பட்ட நான்கு பேரும் ஒரே சமயத்தில்தான் மருத்துவமனைக்கு போனோம். என் பெற்றோர் தனியாகவும், நானும், அ.சா.1ம் தனியாகவும் 45 நிமிட இடைவெளியில் மருத்துவமனைக்கு போனோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எங்கள் நால்வருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரை 1ம் எதிரி மட்டும்தான் குத்தினார். வேறு யாரும் அடிக்கவில்லை. அ.சா.2–ஐ நான்கு பேர் அடித்தார்கள். அ.சா.1–ஐ 1ம் எதிரி குத்தினார். மற்ற நான்கு பேர் அவரை அடித்தார்கள். எங்கள் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளன. அதனால் எங்களுக்கு பாதுகாப்பிற்காக என் பெற்றோர் வர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் வண்டிக்கு சென்றுவிடுவதால் என் பெற்றோர் பாதுகாப்பிற்காக வருவார். இதுவரையில் எங்கள் வீட்டில் எந்த அசம்பாவிதமும் நடந்ததில்லை. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் இந்த சம்பவத்தை பார்த்தார்கள். அவர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் திருநெல்வேலியில் இருக்கும்போது திருநெல்வேலி போலீசாரும், ஏரல் போலீசாரும் விசாரித்தார்கள். என் தகப்பனார் இறந்தபிறகு திருநெல்வேலியில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசாரிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் என் விலாசம் தவறாக

எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் இரண்டு விதமாக நடந்தது என்றும், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.

**4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

13.11.2019 அன்று இரவு சுமார் 8.45 மணியளவில் என் கணவர் வீட்டிற்கு வந்தார். சம்பவம் நடந்து கொண்டிருக்கும்போது வந்தார். ஆம்புலன்சில் நான் பெற்றோருடன் போகவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் நான் என் கணவர் மாரித்துரையுடன் மருத்துவமனைக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 108 ஆம்புலன்சில் என் கணவருடன் மருத்துவமனைக்கு வந்ததாக மருத்துவரிடம் நான் சொல்லவில்லை. எங்கள் வீடு இருக்கும் பகுதி மாரமங்கலம். நான் எங்கள் வீட்டில் இருக்கும்போது எனக்கு காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 மீது பல வழக்குகள் உள்ளன என்றால் எனக்கு தெரியாது. என் பெற்றோருக்கு தீப்பாச்சி மாரமங்கலத்தில் வைத்துதான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் அருகில்தான் காயம் ஏற்பட்டது. எதிரிகள்மீது உள்ள முன்விரோதத்தால் எதிரிகளை இந்த வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த வகையான கம்புகள் வைத்திருந்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.05 18:20:22 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மாரியப்பன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2025.

All Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது மாரமங்கலத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன காளியப்பன் என் தம்பி. அ.சா.1 அவரது மகன். அ.சா.2 மற்றும் 3 அவரது மனைவி மற்றும் மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். 12.11.2019 அன்று வினித் என்ற என் தம்பி மகனுக்கும், 1ம் எதிரிக்கும் பேனர் வைப்பது சம்பந்தமாக வாய்த்தகராறு ஏற்பட்டது. மறுநாள் மாரமங்கலத்தில் ஒரு இறப்பு காரணமாக நாங்கள் இறப்பு நடந்த வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். இறப்பு வீட்டிற்கு பக்கத்து வீடு 1ம் எதிரியின் வீடு. அப்போது மேற்படி வினித் அ.சா.1–ஐ அழைத்து வந்து 1ம் எதிரியின் வீட்டிற்கு 1ம் எதிரியிடம் கேட்பதற்காக போனார்கள். அப்போது வாய்த்தகராறு ஏற்பட்டது. இறப்பு வீட்டிற்கு அருகில் சத்தம்போடக் கூடாது என்று நாங்கள் அனுப்பிவிட்டோம். அடக்கம் செய்துவிட்டு வருவதற்கு மாலை 5 மணியாகிவிட்டது. நான் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு இரவு 8 மணியளவில் இறந்தவர் வீட்டிற்கு சாமி கும்பிட போனோம். அப்போது இரவு 8.15 மணியளவில் நிறைய சத்தம் கேட்டது. அந்த சத்தம் விவசாய சங்கம் அருகில் கேட்டது. சாமி கும்பிட வந்த நாங்கள் நான்கு, ஐந்து பேர் சத்தம் கேட்ட இடத்திற்கு போனோம். அங்கு அடிதடி நடந்து கொண்டிருந்தது. அப்போது 1ம் எதிரி கத்தியால் என் தம்பியை மார்பில் குத்திவிட்டார். மற்ற எதிரிகள்

அங்கிருந்த பெண்களை கம்பால் தாக்கினார்கள். அ.சா.1 முதல் அ.சா.3–ஐ கம்பால் தாக்கினார்கள். அதன்பின் அ.சா.3ன் கணவர் மாரித்துரை 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி அனைவரையும் ஏற்றிவிட்டு தூத்துக்குடி மருத்துவமனைக்கு அனுப்பினோம். நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்தேன். மேற்படி காளிமுத்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மூன்று நாட்கள் கழித்து இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவ இடத்தில் இருந்த விபரம் அ.சா.1 முதல் 3 ஆகியோருக்கு தெரியும். நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வந்தேன். போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார். போலீஸ் விசாரணையில் நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வந்ததாக சொன்னேன். அடிபட்டவர்கள் ஒரு ஆம்புலன்ஸ் மூலமாகத்தான் வந்தார். மொத்தம் ஐந்து பேர் வந்தார்கள். அ.சா.1 மற்றும் 3 ஒரு ஆம்புலன்ஸ் மூலமாகவும், என் தம்பி மற்றும் அ.சா.2 வேறு ஆம்புலன்ஸ் மூலமாகவும் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 புகார் கொடுத்தது தெரியும். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில்தான் அ.சா.1 புகார் கொடுத்தார். நான் அப்போது உடனிருந்தேன். ஏரல் போலீசார் வந்தார்கள். ஆனால் போலீசார் யார் என்று தெரியாது. புகார் கொடுத்தற்கு அத்தாட்சியாக என்னிடம் கையொப்பம் பெறவில்லை. நான் மருத்துவமனைக்கு வரவில்லை என்றும், என் முன்பாக புகார் கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புகாரில் அ.சா.1 என் பெயரை சொல்லவில்லை. சம்பவ சமயத்தில் நான் இல்லை என்பதால்தான் புகாரில் என் பெயரை அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பியை ஆம்புலன்சில் ஏற்றும்போது என் உடைகளில் ரத்தம்படவில்லை. ஆம்புலன்சில் ஏற்றிய நபர்களில் காயம்படாத நபர் நான்மட்டும்தான் என்றால் என் தம்பியின் மருமகன் மாரித்துரைக்கு காயம்

ஏற்படவில்லை. நானும் சேர்ந்துதான் காயம்பட்ட நபர்களை ஆம்புலன்சில் ஏற்ற உதவி செய்தேன். நான் அந்த இடத்தில் இல்லை என்றும், நான் எந்த உதவியும் செய்யவில்லை என்றும், அதனால்தான் என் உடைகளில் ரத்தம்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இறந்துபோனவரின் அண்ணன் என்பதால் இந்த வழக்கில் என்னை பின்னிட்டு பொய்யாக சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மாரமங்கலம் விவசாய சங்க கட்டிடம் தென்வடல் சாலையில் மேல்புறமாக உள்ளது. சாலையின் மேற்கு புறம் காலி மனையாக உள்ளது. அந்த சாலையில் என் வீடு இல்லை. அங்கு நாராயணன், சங்கர், மூக்கன், திரவியம் ஆகியோர் வீடுகள் உள்ளன. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், இறந்துபோனவர் என் தம்பி என்பதால் நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை தடுக்க முயற்சிக்கவில்லை என்றால் என் உடைகளில் ரத்தம்படவில்லை என்றால் நான் சம்பவத்தை தடுக்க முயற்சித்தேன். எனக்கு காயம் ஏற்படவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.05 18:20:31 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.